# கல்வி அமைச்சு

## அவி/21/0320/308/016ஆம் இலக்க மற்றும் 2021.03.01ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய இலங்கை அதிபர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் -2021/2022

கல்வி அமைச்சின் கீழ் உள்ள இலங்கை அதிபர் சேவையின் தரம் I, II, III இல் காணப்படும் 4718 வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை அதிபர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்க்கும் முகமாக நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொடர்புடைய அனைத்து தகைமைகளும் விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகளில் இலங்கை அதிபர் சேவை பதவிகளில் காணப்படும் 4718 வெற்றிடங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலங்களில் பின்வருமாறு.

| தொடர் இலக்கம் | மாகாணம் | சிங்களம் | தமிழ் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | சப்ரகமுவ | 649 | 135 | 784 |
| 2 | வடமேல் | 527 | 137 | 664 |
| 3 | கிழக்கு | 97 | 526 | 623 |
| 4 | மத்திய | 335 | 279 | 614 |
| 5 | ஊவா | 376 | 87 | 463 |
| 6 | தெற்கு | 494 | 32 | 526 |
| 7 | மேல் | 427 | 72 | 499 |
| 8 | வட மத்திய | 275 | 40 | 315 |
| 9 | வடக்கு | 13 | 217 | 230 |
| | | 3193 | 1525 | 4718 |

இந்த அறிவிப்பில் உள்ள “சேவை” என்ற சொல் இலங்கை அதிபர் சேவையைக் குறிக்கிறது. “சேவைப் பிரமாணக் குறிப்பு” எனக் கருதப்படுவது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை அதிபர்கள் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பை குறிக்கிறது.

02. இந்த அறிவிப்பின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் பதிவுத் தபால் மற்றும் மின்னஞ்சல் ஆகிய இரண்டு விதங்களிலும் அனுப்பப்படுவது கட்டாயமானதாகும். விண்ணப்பங்கள் “உதவிச் செயலாளர், அதிபர் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல” எனும் முகவரிக்கு 2022.01.26ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும். அது போல வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் கூடிய விண்ணப்பங்களை principalbranch2@gmail.com மற்றும் sasese.moe@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மட்டுமே 2022.01.26ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை மின்னஞ்சல் மற்றும்

பதிவுத் தபாலில் உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

விண்ணப்ப உறையின் மேல் இடது மூலையில், "இல அவி/21/0320/308/016 மற்றும் 2021.03.01ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின்படி, இலங்கை அதிபர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை 2021/2022" என்று குறிப்பிடப்பட வேண்டும்.

03. **சேவை நிபந்தனைகள்:**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1885/31 மற்றும் 2014.10.22ஆம் திகதி தாங்கிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அதிபர்கள் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளும் அந்த பிரமாணக் குறிப்பில் இதுவரை மேற்கொண்ட திருத்தங்களுக்கும் இதன் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் அரச சேவையில் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் உட்படுமாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு நியமிக்கப்படுவார்கள்.

04**. சம்பள அளவு: GE -4-2016**

ரூபா. 35,280 - 7x680 - 6x825 - 11x1,335 - 14x1,650 – 82,775

**05. தகைமைகள்:**

5.1 பின்வரும் தகைமைகளுடன் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர் பதவியில் கடமை நிறைவேற்றும் / கடமை தழுவும் ஆசிரியர்கள் இலங்கை அதிபர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளத் தகுதியுடையவர்கள்.

5.2 கல்வி மற்றும் தொழில் தகைமைகள்

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் இருந்து பெற்ற கல்விமாணி பட்டம்

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பாடத்துறையின் பட்டப்படிப்புடன் பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

(அ) கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா அல்லது பாட சேர்மானத்தில் கல்வி விடயமானது குறைந்தது 50% உள்ளடக்கிய விடயத்துறைசார் பட்டப்பின் கல்வி டிப்ளோமா

(ஆ) ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்

(இ) தேசிய போதனாவியல் டிப்ளோமா,

அல்லது

(iii) தேசிய போதனாவியல் டிப்ளோமா / ஆசிரியர் பயிற்சி சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்

குறிப்பு:

“ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்” என்பது கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு வருடங்களுக்கு குறையாத நிறுவனம் சார்ந்த ஆசிரியர் பயிற்சி பாடநெறி அல்லது கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தொலைக்கல்வி முறையில் பின்பற்றப்பட்ட மூன்று வருடத்திற்கும் குறையாத ஆசிரியர் பயிற்சிப் பாடநெறியாகும்.

5.3 அனுபவம்:

(அ) மேற்படி தகைமைகள் 5.2 (i) அல்லது 5.2 (ii) உடன் இலங்கை ஆசிரியர் சேவையில் முனைப்பானதும் திருப்திகரமானதுமான ஐந்து (05) வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த அலுவலராக இருத்தல் மற்றும் அந்த காலப்பகுதியில் அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ஆ) மேற்படி 5.2 (iii) தகைமைகளுடன் இலங்கை ஆசிரியர் சேவையில் ஆறு (06) வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலப்பகுதியை பூர்த்தி செய்து அக்காலப்பகுதியில் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்ற அலுவலராக இருத்தல் வேண்டும்.

5.4 உடல் மற்றும் உளசார் தகைமை

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு: விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு மேற்குறிப்பிடப்பட்ட முன் அண்மித்த சேவைக் காலத்தினுள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உரிய தினத்தில் பெற்றுக்கொள்ளாததும், இந்தக் காலப்பகுதிக்குள் செய்யப்பட்ட குற்றத்திற்காக யாதேனும் தண்டனை (எச்சரிக்கை தவிர) பெற்றுக்கொண்டதுமான அலுவலர்கள் இந்த நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற தகுதி பெறமாட்டார்கள்.

5.5 ஏனைய தகைமைகள்

i. இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.

ii. இலங்கை அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையில் மூன்று (03) தடவைகளுக்கு மேல் தோற்றிய எந்தவொரு விண்ணப்பதாருக்கும் அனுமதி அளிக்கப்பட மாட்டாது. **என்றாலும் இலங்கை அதிபர்கள் சேவையில் கடமை நிறைவேற்றும் /கடமைகளை தழுவும் அலுவலர்களுக்கு மட்டுமே இலக்கம் அவி/21/0320/308/016மற்றும் 2021.03.01ஆம் திகதியிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை உள்ளிட்டதாக சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை நான்கு (04) ஆக கவனத்திற் கொள்ளப்படும்.**

iii. அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக தோற்றத் தேவையான அனைத்துத் தகைமைகளும் இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

iv. இலங்கை ஆசிரியர் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

v. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2020 இன் படி ஒழுக்காற்று தண்டனை பெற்றிருக்கக்கூடாது.

5.6 வயது

அதிகபட்ச வயது 2022.01.26 அன்று 50 ஆக இருக்க வேண்டும்.

குறிப்பு: இலக்கம் அவி/21/0320/308/016 மற்றும் 2021.03.01 திகதியிட்ட அமைச்சரவை தீர்மானத்தில் காட்டப்பட்டவாறு 2022.01.26ஆம் திகதிக்கு முன் அண்மித்த 05 வருட காலப்பகுதியில் அதிபர் பதவிகளில் கடமை நிறைவேற்றும்/ கடமை தழுவும் அலுவலர்களுக்காக அதிகபட்ச வயதெல்லை 58 ஆகும். மேலும் இந்த அலுவலர்கள் இலங்கை அதிபர்கள் சேவைப் பிரமாணக்குறிப்பின் படி மற்ற அனைத்து தகுதிகளையும் 2022.01.26ஆம் திகதியில் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

## 06. விண்ணப்பிக்கும் முறை

(i) விண்ணப்பதாரர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளத் தகுதி பெற்ற அதே மொழிமூலத்தில் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் மற்றும் முழுமையாக தகவல் தெரிவிக்கப்படாத விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதிக்கு பின்பு பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## 07. தவறான தகவலை வழங்குதல்:

விண்ணப்பதாரருக்கு தகைமைகள் இல்லை எனக் கண்டறியப்பட்டால், எந்த சந்தர்ப்பத்திலும் அவரின் தோற்றும் தகுதி இரத்து செய்யப்பட இடமுண்டு. தோற்றுபவரால் ஏதாவது விடயங்கள் பொய் எனத் தெரிந்தும் முன்வைக்கப்பட்டிருப்பது உறுதியானால் அல்லது அவ்வாறு இல்லாவிடினும் யாதும் முக்கியமான விடயம் வேண்டுமென்றே மறைக்கப்பட்டது என்று கண்டறியப்பட்டால் விண்ணப்பதாரர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட வாய்ப்புண்டு.

## 08. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான முறைமை

(i) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை: -

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உரியதாக்கப்பட்ட புள்ளியிடும் திட்டம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **புள்ளித் திட்டம்** | **புள்ளிகள்** |
| --- | --- |
| 1. 2022.01.26ஆம் திகதிக்கு முந்தைய 5 ஆண்டுகளினுள் மாகாண அதிகாரிகளின் முறையான நியமனக் கடிதம் / கடமை பொறுப்பேற்ற சம்பவ திரட்டு பதிவேட்டின் குறிப்பின் படி கடமை நிறைவேற்றும் அல்லது கடமை தழுவும் காலம் (வருடத்திற்கு 07 புள்ளிகள் என்பதாக அதிகபட்சம் 05 ஆண்டுகள்) | 35 |

குறிப்பு :

i கடமை நிறைவேற்றும் அதிபராக பணியாற்றிய காலம் குறித்து வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் அனுமதியுடன் கூடிய சேவையை உறுதிப்படுத்துவதற்கான கடிதம் நேர்முகப் பரீட்சையின் போது கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். (தொடர்த்தேர்ச்சியாக 12 மாத சேவைக்கு மட்டுமே ஒரு வருடத்துக்கு உரித்தான புள்ளி அளவு வழங்கப்பட வேண்டும்.)

ii உதவி மற்றும் பிரதி அதிபர் பதவியில் கடமை நிறைவேற்றும் அல்லது கடமை தழுவும் வண்ணம் நியமிக்கப்பட்ட அலுவலர்க்கு இதன் கீழ் புள்ளிகள் உரித்தாவது கிடையாது.

2. 2022.01.26ஆம் திகதிக்கு முன் அண்மித்த 5 வருட கஷ்ட பிரதேச சேவை காலம் **30**

வருடத்திற்கு 06 புள்ளிகள் என்பதாக அதிகபட்சம் 05 ஆண்டுகள் (தொடர்ந்து 12 மாதங்கள் நிறைவு செய்யப்பட்ட சேவைக் காலத்திற்கு மட்டும் ஒரு வருடத்திற்கான புள்ளிகளின் அளவு கொடுக்கப்பட வேண்டும்))

எனது இலக்கம் ED / 3/37/9/2/3 (i) மற்றும் 2005.01.18ஆம் திகதியிட்டு வெளியிடப்பட்ட 2005/01 இலக்கம் தாங்கிய **“இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் ஒழுங்குகள் மற்றும் தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் அடிப்படையிலான பாடசாலைகளின் வகைப்பாடு”** எனும் சுற்றறிக்கையின் படி இல. ED/ 3/37/9/31 மற்றும் 2006.11.24ஆம் திகதியிட்டு வெளியிடப்பட்ட 2006/43 இலக்கம் தாங்கிய “**கஷ்டம் மற்றும் மிகவும் கஷ்டமான பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் பற்றாக்குறையை தீர்த்து வைக்க ஆசிரியர் விநியோகத்தைத் ஊக்குவிக்கும் முகமாக நிதி ஊக்குவிப்புத்தொகை வழங்குவது குறித்து பாடசாலைகளை கஷ்டமானது மற்றும் மிகவும் கஷ்டமானது என வகைப்படுத்தல்**” எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய மாகாண அதிகாரிகளால் இனங்காணப்பட்ட கஷ்ட பாடசாலைகள் அட்டவணைக்கு ஏற்ப மிகக் கஷ்ட மற்றும் கஷ்ட பாடசாலைகளில் சேவையாற்றும் கடமை நிறைவேற்றும் / கடமை தழுவும் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த புள்ளி வழங்கப்படும்.

3. முதுமாணி பட்டம் (அதிகபட்சம் 15 புள்ளிகள்) 15
(கல்வி அல்லது முகாமைத்துவ விடயத்தில் பெற்றுக்கொண்ட முதுமாணி பட்டத்துக்கு மட்டுமே புள்ளி வழங்கப்படும்)

4. கல்வித் துறை தொடர்பான ஆராய்ச்சி / ஒப்படை / செயற்றிட்டம் முன்வைத்தல் (அதிகபட்சம் 10 புள்ளிகள்) 10

4.1 ஆராய்ச்சி- (ஒரு ஆராய்ச்சிக்கு 3 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 02 இற்காக) (முதுமாணி / பட்டப்பின் டிப்ளோமாவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒப்படைகள் தொடர்பான ஆராய்ச்சி / ஒப்படைக்கு புள்ளி வழங்கப்படமாட்டாது)

4.2 வெளியீடுகள் அல்லது செயற்றிட்டங்கள்- (ஒரு வெளியீட்டுக்கு/ செயற்றிட்டத்திற்கு 2 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் வெளியீடு அல்லது செயற்றிட்டம் 02இற்காக)

குறிப்பு:

I. பாடநூல் மற்றும் அதையொட்டிய நூல்களுக்காக புள்ளி வழங்கப்படாததென்பதோடு கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபையினால் அனுமதிகப்பட்ட வெளியீடுகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

II. கல்வித்துறைக்குரியதான பிரயோகத்தை நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டத்திற்கு மட்டுமே புள்ளி வழங்கப்படுவதோடு அதற்காக வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்ததை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைத்தல் கட்டாயமாகும்.

5. ஆங்கில மொழி தேர்ச்சி (அதிகபட்சம் 05 புள்ளிகள்) 05

5.1 ஆங்கிலத்தில் டிப்ளோமோ கற்றதன் மூலம் பெறப்பட்ட சான்றிதழ் அல்லது அதற்கும் உயர்வான தகுதி (டிப்ளோமாவின் காலம் 06 மாதங்கள் அல்லது அதற்கும் அதிகமாக இருக்க வேண்டும்.) (05 புள்ளிகள்)

5.2 ஆங்கிலத்தில் ஒரு சான்றிதழ் கற்கையிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ் (சான்றிதழ் பாடநெறி தொடர்புடைய காலத்திற்கு 03 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்) (03 புள்ளிகள்)

5.3 ஆங்கில மொழி தேர்ச்சிக்கு 1 முதல் 3 வது மாதம் வரை கற்ற சான்றிதழ் (02 புள்ளி)

குறிப்பு:

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தின் அல்லது இலங்கை மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழுக்காக மட்டும் புள்ளி வழங்கப்படும்.

II. பெற்றுக்கொள்ளப்பட்ட உயரிய தகைமக்காக புள்ளி கிடைக்குமாறு ஒரு சான்றிதழுக்கு மட்டுமே புள்ளி வழங்கப்படும்.

III. சான்றிதழ் பத்திரங்களில் காலப்பகுதியை உறுதி செய்வதற்குரிய ஆவணம் நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்கப்பட வேண்டும்.

6. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு (அதிகபட்சம் 05 புள்ளிகள்) 05

6.1 தகவல் தொழில்நுட்ப டிப்ளோமாவைக் கற்றதன் மூலம் பெறப்பட்ட சான்றிதழ் அல்லது அதற்கும் உயரிய தகைமை (டிப்ளோமா கால அளவு 06 மாதங்கள் அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்) (05 புள்ளிகள்))

6.2 தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பாடநெறியை பூர்த்தி செய்தபிறகு பெறப்பட்ட சான்றிதழ் (சான்றிதழ் பாடநெறியானது தொடர்புடைய காலத்திற்கு 03 மாதங்கள் அல்லது அதற்கும் அதிகமானதாக இருக்க வேண்டும்) (03 புள்ளிகள்)

<u>குறிப்பு</u>

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தின் அல்லது இலங்கை மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழுக்காக மட்டும் புள்ளி வழங்கப்படும்.

II. பெற்றுக்கொள்ளப்பட்ட உயரிய தகைமக்காக புள்ளி கிடைக்குமாறு ஒரு சான்றிதழுக்கு மட்டுமே புள்ளி வழங்கப்படும்.

III. சான்றிதழ் பத்திரங்களில் காலப்பகுதியை உறுதி செய்வதற்குரிய ஆவணம் நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்கப்பட வேண்டும்.

7. 2016, 2017. 2018, 2019, 2020, ஆகிய 05 ஆண்டுகளில் சேமிக்கப்பட்ட விடுமுறைகள், 10
(வருடத்திற்கு சேமிக்கப்பட்ட 05 விடுமுறைகள் அல்லது அதற்கு மேற்பட்டு சேமிக்கப்பட்ட விடுமுறைக்கு அதிகபட்சம் 02 புள்ளிகள் என்றவாறாக) (அதிகபட்சம் 10 புள்ளிகள்)

அதிபர் / வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதி செய்யப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. பாடசாலையின் அபிவிருத்திக்கு நேரடி பங்களிப்பை உறுதி செய்தல் 06
(சிரமதானம் / பெறுபேற்று அதிகரிப்பு / கண்காட்சிகள் / ஒழுக்காற்று குழு / பாட இணைச்செயற்பாடுகள் மற்றும் ஏனைய வெற்றிச்சாதனைகள்) 02 புள்ளிகள் என்பதாக அதிகபட்சம் 03இற்காக புள்ளி வழங்கப்படும்

குறிப்பு:

I. அதிபரால் பரிந்துரைக்கப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதி செய்யப்பட்ட ஆவணங்கள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**II.** கடமை நிறைவேற்றும் / கடமை தழுவும் அதிபர்கள் மேலே இலக்கம் 8 இல் குறிப்பிட்ட விடயங்களை உறுதி செய்யும் ஆவணங்களை வலயக் கல்விப் பணிப்பாளரின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

9. கற்றல் - கற்றல் செயல்முறைக்கு மேலதிகமாக, பாடசாலை மாணவர்களின் திறன் வளர்ச்சிக்காக பல்வேறு துறைகளில் செய்யப்பட்ட சேவைகள் / பங்களிப்புகள் / மாணவர் சங்கங்கள் / சங்கங்களின் பொறுப்பு / பயிற்சி நடவடிக்கை (ஒரு விடயத்திற்கு 03 புள்ளிகள் என்பதாக அதிகபட்சம் 03இற்காக புள்ளி வழங்கப்படும்) 09

குறிப்பு:

I. அதிபரால் பரிந்துரைக்கப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதி செய்யப்பட்ட ஆவணங்கள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**II.** கடமை நிறைவேற்றும் / கடமை தழுவும் அதிபர்கள் மேலே இலக்கம் 9 இல் குறிப்பிட்ட விடயங்களை உறுதி செய்யும் ஆவணங்களை வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

10. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளும் போது காட்டிய திறன் அதிபரின் வகிபங்கு தொடர்பான தலைப்பில் முன்வைப்பு செய்யப்பட வேண்டும். இதற்கு பின்வரும் நியதிகளின் கீழ் 25 புள்ளிகள் வழங்கப்படும். 25

| | நியதி | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 04 |
| 2 | சமர்ப்பிக்கும் திட்டம் | 04 |
| 3 | சமர்ப்பிக்கும் திறன் | 08 |
| 4 | விடய அறிவு | 05 |
| 5 | நேர முகாமைத்துவம் | 04 |

**மொத்த புள்ளிகள் 150**

(ii) இலக்கம் அவி/21/0320/308/016 மற்றும் 2021.03.01ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு முறை:

a) உரிய மாகாணத்திலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் இலங்கை அதிபர் சேவையில் நிலவும் வெற்றிடங்கள், அந்த மாகாணத்திற்கு விண்ணப்பித்த அலுவலகர்களிடமிருந்து நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

b) இலங்கை அதிபர் சேவையின் தரம் III இல் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலம் என்பதாக உயர்புள்ளி பெற்ற அலுவலர்கள் மாகாண வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் மொழிமூலம் என்றவகையில் வேறுவேறாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

c) கடமை நிறைவேற்று அடிப்படையில் அல்லது கடமை தழுவுதல் அடிப்படையில் புள்ளி பெற்ற கடமை நிறைவேற்றும் / கடமை தழுவும் அதிபர்கள் மற்றும் கஷ்ட பிரதேச அடிப்படையில் புள்ளி பெற்ற ஆசிரியர்கள் அதிபர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டால், அத்தகைய

அலுவலர்களுக்கு கஷ்ட பிரதேச பகுதிகளின் பாடசாலைகளில் நிலவும் அதிபர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

d) அலுவலர்கள் பணியமர்த்தப்பட்ட பாடசாலையில் மூன்று (03) ஆண்டுகள் கட்டாயம் சேவை செய்தல் வேண்டும் என்பதோடு அதன்பின் அதையொத்த இன்னொரு பாடசாலைக்கு இடமாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

## 09. சேவையில் அமர்த்தும் நிபந்தனைகள்:

9.1 இந்த பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள்/ தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியங்களுக்கான பங்களிப்பு நிதி செலுத்த வேண்டும். ஒரு வருட கடமை நிறைவேற்றல் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

9.2 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 12.1 மற்றும் 12.6 முதல் 12.12 வரையிலான பிரிவுகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் பொருந்துவதாக இருக்கும்.

9.3 இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவுற முன்னர் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

9.4 அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இன் படி, பிற அரசகரும மொழிகளில் தொடர்புடைய தேர்ச்சி நிலை, நியமனம் செய்யப்பட்டு 03 வருட காலத்திற்குள் பெறப்பட வேண்டும். இணைப்பு மொழியான ஆங்கிலமொழி தொடர்பான தேர்ச்சி ஒவ்வொரு அலுவலர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் திகதியிலிருந்து மூன்று (03) ஆண்டுகளுக்குள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றிக்கை 08/2020 இன் படி அதில் குறிப்பிட்ட தகைமைகளுடன் கூடியதான அலுவலர்கள் இணைப்பு மொழியில் சித்திபெறும் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்த அலுவலர்களாக கருதப்படுவதோடு ஏனைய அலுவலர்கள் இலங்கை அதிபர் சேவைக்கான ஆங்கில மொழிப் பரீட்சைக்குத் தோற்றி குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

9.5 இலங்கை அதிபர் சேவை நியமனக் கடிதத்தினைப் பொறுப்பேற்று அதன்படி பெற்றுக் கொடுக்கப்பட்ட இடநிலைப்படுத்தலுக்கமைய அவர்கள் கடமைகளை ஏற்காதுவிட்டால், நியமனம் இரத்து செய்யப்பட்டு, அலுவலர்கள் மீண்டும் ஆசிரியர் சேவைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் அது குறித்தும் இந்த வெற்றிடங்களை நிரப்புவது குறித்தும் முடிவெடுப்பார்கள்.

11. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவிப்பில் மொழி பனுவல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழி மூல அறிவிப்பு சரியானதெனக் கருதப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பேராசிரியர் கே. கபில சீ. கே.பெரேரா

செயலாளர்,

கல்வி அமைச்சு